

கல்லீரல் மற்றும் அது தொடர்பான நோய்களுக்கு அறுவை சிகிச்சை செய்து கொண்ட நோயாளிகள் 3 பேர்களுடன் மியாட் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், ஆஸ்பத்திரியின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், குடல் இரைப்பை சிகிச்சை நிபுணர் டாக்டர் சுரேந்தர் ஆகியோரை படத்தில் காணலாம்.

### தலைமைச்செயலக அதிகாரிக்கு கணையத்தில் இருந்த கட்டி அகற்றம்:

# உயிர் வாழ போராடியவருக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை

## மியாட் ஆஸ்பத்திரி டாக்டர்கள் சாதனை

சென்னை,நவ.16-

சென்னை தலைமைச் செயலக அதிகாரிக்கு கணையத்தில் உள்ள கட்டி அகற்றப்பட்டது. உயிருக்கு போராடியவருக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

ஒரு வாலிபருக்கு கல்லீரலில் 2½ கிலோ எடை உள்ள கட்டி அகற்றப்பட்டது. சிக்கலான இந்த 3 அறுவை சிகிச்சைகளை மியாட் மருத்துவமனை டாக்டர்கள் செய்து சாதனை புரிந்துள்ளனர்.

### டாக்டர்கள் பி.வி.ஏ.மோகன்தாஸ்-சுரேந்தர்

இந்த அறுவை சிகிச்சை குறித்து மியாட் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் பி.வி.ஏ.மோகன்தாஸ், குடல் மற்றும் இரைப்பை அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் சுரேந்தர் ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது:-

சென்னை மியாட் மருத்துவமனையில் கல்லீரல் மற்றும் கணையம் தொடர்பான நோய்களுக்கு சிகிச்சை அளித்தல் மற்றும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையம் தொடங்கப்பட்டுள்ளது.

3 பேர்களுக்கு முக்கிய அறுவைசிகிச்சைகளை மியாட் ஆஸ்பத்திரி டாக்டர்கள் செய்து வெற்றி கண்டுள்ளனர். அதன் விவரம் வருமாறு:-

### 2½ கிலோ கட்டி அகற்றம்

கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணத்தை சேர்ந்தவர் எஸ்.வி. வெங்கடேசன் (வயது 39). அவருக்கு கடந்த ஒரு மாதமாக அடிவயிற்றில் தீவிரமாக வலி ஏற்பட்டது.எனவே அவர் தனியார் ஆஸ்பத்திரியில்பார்த்ததில் நுரையீரலில் 2½ கிலோ எடை உள்ள கட்டி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால் அவர் அந்த ஆஸ்பத்திரியில் இருந்து மியாட் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டார்.இங்கு அவரை நாங்கள் பரிசோதித்துவிட்டு அந்த கட்டியை அறுவை சிகிச்சை செய்து அகற்றினோம். இந்த அறுவை சிகிச்சை 4 மணிநேரம் நடைபெற்றது. இப்போது அவர் குணம் அடைந்து வருகிறார்.

### கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை

நாகர்கோவிலைச்சேர்ந்தவர் ஆறுமுகம்(வயது57).அவருக்கு கல்லீரலில் கட்டி உள்ளது என்று தனியார் ஆஸ்பத்திரியில் முடியாத நிலையில் மியாட் மருத்துவமனைக்கு வந்தார். அனைத்து துறை நிபுணர்களுடன் கலந்து ஆலோசனை நடத்தினோம். கல்லீரல் முழுவதும் கெட்டுப்போய் விட்டது. கதிரியக்க சிகிச்சை அளிக்கப்பட்டது. அப்போது சற்று உடல் நலம் தேறியது.

அதைத்தொடர்ந்து அவருக்கு கல்லீரல் மாற்று சிகிச்சைதான் ஒரே வழி என்று அறிந்தோம். உயிர் வாழ போராடிக்கொண்டிருந்தார். அவருக்கு கோவையில் இறந்த ஒருவரின் கல்லீரலை ஆறுமுகத்திற்கு அறுவை சிகிச்சை செய்துபொருத்தினோம். உடனடியாக அவருக்கு நல்ல பலனை தந்தது. இப்போது அவர் நல்ல நிலையில் உள்ளார்.

### தலைமைச்செயலக அதிகாரி

சென்னை தலைமைச்செயலகத்தில் பொதுப்பணித்துறை பிரிவு அதிகாரியாக உள்ளவர் கே.வெங்கடகிருஷ்ணன் (வயது 47). அவருக்கு தொடர்ந்து வயிற்று வலி ஏற்பட்டது. உடல் மெலிந்தும் காணப்பட்டார். அவருக்கு கணையத்தில் பெரிய கட்டி இருந்தது கண்டுபிடித்தோம். பின்னர் அவருக்கு அறுவை சிகிச்சை செய்தோம். இப்போது அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார்.

இவ்வாறு டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸ், டாக்டர் சுரேந்தர் ஆகியோர் தெரிவித்தனர்.

பேட்டியின்போது ஆஸ்பத்திரியின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், டாக்டர் அஜித் ஆகியோர் உடன் இருந்தனர்.